10 JUN 201
EASTERN UNIVERSITY

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – I
2009/2010 (ஜனவரி/ பெப்பிரவரி 2013)

### TLS 2104 குறிப்பிட்ட பாட நூல்கள் - I (20ம் நூற்றாண்டு)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

01. ஈழத்து நவீன கவிதை உருவாக்கத்தில் மகாகவியின் பங்களிப்புக் குறித்துப் பரிசீலிக்குக.

02. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத் தமிழ்ப் பெண்களது வாழ்வியற் கோலங்கள் "நொருங்குண்ட இருதயம்" நாவலில் சித்திரிக்கப்பட்டிருக்குமாற்றினை ஆராய்க.

    அல்லது

    "மக்சீம் கோர்க்கி தனது சமகால ரஷ்யாவின் சமூகப் பிரச்சினைகளையும் மக்கள் எழுச்சியையும் தாய் நாவலில் மிக நுண்ணிதாகச் சித்திரித்துள்ளார்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுக.

03. பெண் பாத்திரங்களுடாக சமூக விமர்சனம் முன்வைக்கப்படும் முறைமையினைப் புதுமைப்பித்தனின் சிறுகதைகளை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக.

04. 'தமிழியல் ஆய்வு வளர்ச்சியில் நா.வானமாமலையின் ஆய்வுகள் திருப்புமுனையாக அமைந்துள்ளன' என்று கூறுவதன் பொருத்தப்பாடு குறித்துப் பரிசீலிக்குக.

05. "சுற்றுச் சூழலியல் தொடர்பான தியடோர் பாஸ்கரனின் சிரத்தை உயிரினங்கள் மீதே குவிந்துள்ளது" என்று கூறலாமா? ஆராய்க.

06. அம்பையின் கதை பின்னும் முறைகளை வீட்டின் மூலையில் ஒரு சமையலறை என்ற தொகுதியை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.